Dhinathdhalam@gmail.com www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654


# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,




**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 059 | வெள்ளிக்கிழமை Friday | 29.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# கர்நாடக முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார் சித்தராமையா

## மாநிலத்தின் புதிய முதல்வராகிறார் டி.கே.சிவகுமார்



பெங்களூரு:

கர்நாடக மாநில முதலமைச்சர் பதவியை சித்தராமையா ராஜினாமா செய்தார். தமது ராஜினாமா கடிதத்தை அவர் மாநில ஆளுநரிடம் இன்று முறைப்படி வழங்கினார். இதனையடுத்து மாநிலத்தின் புதிய முதலமைச்சராக டி.கே.சிவகுமார் விரைவில் பொறுப்பேற்க உள்ளார்.

காலை உணவு விருந்து

கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா, அவரது காவேரி அரசு இல்லத்தில் வைத்து அமைச்சர்களுக்கு இன்று காலை உணவு விருந்தளித்தார். அப்போது, தன்னுடைய ராஜினாமா முடிவை அமைச்சர்கள் மத்தியில் அவர் அறிவித்தார். காங்கிரஸ் கட்சி தலைமையின் அறிவுறுத்தல்படி, இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் அமைச்சரவை சகாக்கள் மத்தியில் சித்தராமையா கூறினார்.

டெல்லியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சி தலைமையுடனான ஆலோசனைக் கூட்டத்தில், தமது முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய சித்தராமையா ஒப்புக்கொண்டதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.இந்தநிலையில் இன்று தமது ராஜினாமா முடிவை அவர் அதிகாரபூர்வமாகஅறிவித்துள்ளார்.

முன்னதாக, முதலமைச்சர் சித்தராமையா அழைப்பை ஏற்று, காலை உணவு விருந்துக்காக அவரது இல்லத்திற்கு வந்திருந்த துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார், சித்தராமையாவின் காலில்விழுந்து ஆசீர்வாதம் பெற்றார்.

பின்னர் ஒருவரையொருவர் ஆரத்தழுவி நலம் விசாரித்துக் கொண்டனர். இருவரின் இந்த நெருக்கம் கர்நாடக மாநில அரசியல் வட்டாரத்தில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

மேலும், அடுத்த கர்நாடக மாநில முதலமைச்சராக டி.கே. சிவக்குமார் விரைவில் பதவியேற்க உள்ளார் என்பது அனேகமாக உறுதியாகிவிட்டது.

நிபந்தனையுடன் முதலமைச்சரானசித்தராமையா

முன்னதாக, 2023 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் வெற்றிப் பெற்று காங்கிரஸ்ஆட்சிஅமைந்தபோது, சித்தராமையா, டி.கே. சிவகுமார் இடையே அதிகார போட்டி ஏற்பட்டது. ஆகையால், இந்த விவகாரத்தில் தலையிட்ட காங்கிரஸ் தலைமை, முதலமைச்சர் பதவியை சில ஆண்டுகளுக்குப் பின் டி.கே. சிவகுமாருக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் சித்தராமை யாவை முதலமைச்சராக அனுமதித்தது.

இதன்படி, சித்தராமையா முதலமைச்சராக பதவியேற்று 3 ஆண்டுகள் நிறைவுற்றநிலையில், இன்று அவர் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்ய இருப்பதாக அறிவித்துள்ளார். இன்று பிற்பகல் 3 மணியளவில் மக்கள் பவனுக்கு சென்று மாநில ஆளுநரிடம் அவர் தன்னுடைய ராஜினாமா கடிதத்தை வழங்க உள்ளார்.

எம்பி பதவியை மறுத்த சித்தராமையா

கடந்த செவ்வாய்கிழமை அன்று நடைபெற்ற காங்கிரஸ் மேலிட கூட்டத்தில் பதவி விலக இருக்கும் சித்தராமை யாவுக்கு மாநிலங்களவை எம்.பி பதவி வழங்க முன்வந்ததாகவும்,ஆனால், அதை அவர் ஏற்க மறுத்துவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல், சித்தராமையாவின் மகனுக்கு மாநில அமைச்சரவையில் முக்கிய பொறுப்பு வழங்கப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் மேலிடம் உறுதியளித்திப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

135 தொகுதிகளில் வெற்றி பெற்ற காங்கிரஸ்

கர்நாடக மாநில சட்டமன்ற பொதுத் தேர்தல் 2023ஆம் ஆண்டு மே 10அன்று ஒரே கட்டமாக நடைபெற்றது. தேர்தலுக்கான முடிவுகள் மே 13 அன்று வெளியாகின. இந்த தேர்தலில், கர்நாடகாவில் மொத்தமுள்ள 224 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி 135 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையை நிரூபித்தது. இதையடுத்து, மாநிலத்தின் முதலமைச்சராக சித்தராமையா தேர்வுச் செய்யப்பட்டார். அத்துடன், துணை முதலமைச்சர் பதவி டி.கே. சிவகுமாருக்கு வழங்கப்பட்டது.

# டெல்லியிலிருந்து சென்னை திரும்பினார் முதலமைச்சர் விஜய்



புது டெல்லி:

இரண்டு நாள் பயணமாக டெல்லி சென்றிருந்த முதலமைச்சர் விஜய், பிரதமர் மோடி, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோரை சந்தித்தநிலையில்,டெல்லியிலிருந்து புறப்பட்டு மதியம் 1 மணியளவில் சென்னை வந்தடைந்தார்.

தமிழக முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற பிறகுமுதன்முறையாக டெல்லிக்குஅவர்அரசு முறை பயணம் மேற்கொண்டிருந்தார்.

10 மணியளவில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்ட அவர் மதியம் 1 மணியளவில் தலைநகரை சென்றடைந்தார். அங்குள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு முதலில் சென்றார். அங்கு அதிகாரிகள் அவருக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்பு அளித்தனர். அதனைத் தொடர்ந்து அங்குள்ள காவலர்கள் அவருக்கு அணிவகுப்பு மரியாதை செலுத்தினர்.

பின்னர், மாலை 4:30 மணியளவில் பிரதமர் அலுவலகத்தில் பிரதமர்நரேந்திரமோடியை சந்தித்தமுதலமைச்சர் விஜய், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அவரிடம் அளித்தார்.

குறிப்பாக, மேகதாது அணை விவகாரம், தமிழ்த்தாய் வாழ்த்து விவகாரம் என மாநிலத்தின் பல்வேறு முக்கியபிரச்சனைகள் குறித்த கோரிக்கைகளை பிரதமரிடம் முதலமைச்சர் விஜய் முன்வைத்தார்.

பிரதமருடனான சந்திப்பைத் தொடர்ந்து, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை முதல்வர் விஜய் சந்தித்தார். அப்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத்தேவையான துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், ரயில்வே திட்டங்கள், தொழில் வழித்தடங்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து உரிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

மாநிலத்தின் பொருளாதாரத்திலும், தொழில் வளர்ச்சியிலும் முக்கியப் பங்காற்றி வரும் ஓசூர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களின் பொதுப் போக்குவரத்தை மேம்படுத்திட மெட்ரோ ரயில் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை நிதியமைச்சரிடம் அவர் முன்வைத்தார்.

தமது டெல்லி பயணத்தின் மற்றொரு முக்கிய அம்சமாக, நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியை விஜய் இன்று சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. ஆனால் அவர்களை சந்திக்காமல் காலை முதலமைச்சர் விஜய் டெல்லியிலிருந்து புறப்பட்டு, மதியம் 1 மணியளவில் சென்னை வந்தடைந்தார்.

இதனிடையே, முதலமைச்சர்விஜய்வரும் ஜூன் 11ஆம் தேதி மீண்டும் டெல்லி செல்லவுள்ளதாகவும், அப்போது நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி மற்றும் சோனியா காந்தியை சந்திக்க வாய்ப்புள்ளதாகவும் காங்கிரஸ் எம்.பி கிறிஸ்டோபர் திலக் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் 108 தொகுதிகளை கைப்பற்றி தமிழக வெற்றிக்கழகம்தனிப்பெரும்பான்மை கொண்ட கட்சியாக உருவெடுத்தது. தமிழகத்தில் ஆட்சி அமைக்க தேவையான 118 இடங்கள் எனும் அறுதிபெரும்பான்மை கிடைக்காததால்திமுக கூட்டணி கட்சிகளாக இருந்த காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், விசிக, ஐ.யு.எம்.எல் கட்சிகளின் ஆதரவுடன் விஜய் கடந்த 10 ஆம்தேதிதமிழகமுதலமைச்சராக பொறுப்பேற்று கொண்டார்.


**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# வானிலை முன்னறிவிப்பு: நீலகிரி, தேனி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் நீலகிரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் நாளை (மே 29) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 5.8 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

மத்திய கிழக்கு- தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ முதல் 7.6 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (மே 29) ஓரிரு இடங்களிலும், 30-ம் தேதி முதல் ஜூன் 3-ம் தேதி வரை ஒருசில இடங்களிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் நாளை தேனி, திண்டுக்கல், நீலகிரி,வேலூர்,திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களிலும், 30-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், திண்டுக்கல், நீலகிரி, தேனி, மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலும்,31-ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், திருப்பத்தூர், திருப்பூர், சேலம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கரூர், திருச்சி,தஞ்சாவூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை நாளையும்,நாளை மறுதினமும் ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

31-ம் தேதி அதிகபட்ட வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்க வாசென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 105 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் ஜூன் 1-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூரில் 6 செமீ, சிவலோகத்தில் 5 செமீ, திருப்பூர் மாவட்டம் அவினாசி, தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில், கன்னியாகுமரி மாவட்டம் சிற்றாறு, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து,நாலுமுக்கு,சேலம் மாவட்டம் ஆனைமடுவில் தலா 4 செமீ மதுரை மாவட்டம் எழுமலை, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, தூத்துக்குடி விமான நிலையத்தில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது.


**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## தினத்தளம் நாளிதழ் செய்தி எதிரொலியாக சேலம்தொளசம்பட்டி 98A பேருந்து சந்தை பேருந்து நிறுத்தத்திற்கு வழக்கம்போல் வந்து செல்கிறது



சேலம் - தொளசம்பட்டி இடையே இயக்கப்படும் 98A பேருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக சந்தை பேருந்து நிலையத்திற்கு வராமல். பஸ் ஸ்டாண்ட் பேருந்து நிலையத்திலேயே பயணிகளை ஏற்றிக்கொண்டு நேரடியாக சென்று கொண்டிருந்தது.பின்னர் சில நாட்கள் கழித்து பள்ளி மாணவர்களின் வசதிக்காக மட்டும் குறிப்பிட்ட நேரங்களில் பேருந்து சந்தை நிறுத்தத்திற்கு வந்து சென்றது. இருப்பினும் பொதுமக்களின் முழுமையான தேவைகள் பூர்த்தியாகவில்லை என கூறப்பட்டது இது சம்பந்தமாக நமது தினத்தளம் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது இதன் எதிரொலியாக. மீண்டும் வழக்கம்போல் 98A பேருந்து சந்தை பேருந்து நிறுத்தத்திற்கு வந்து செல்கிறது இதனால்.

இந்த நிலையில், சமீபத்தில் வெளியான செய்தி மற்றும் பொதுமக்களின் தொடர் கோரிக்கைகளின் எதிரொலியாகதற்போது 98A பேருந்து அனைத்து நேரங்களிலும் சந்தை பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி வருகிறது.

இதனால் அந்த பகுதி பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியதாகவும், பயண சிரமம் குறைந்துள்ளதாகவும் அவர்கள் கூறினர். போக்குவரத்து துறை இதனை தொடர்ந்து கண்காணித்து, பொதுமக்கள் நலனுக்கேற்ப சேவையை மேம்படுத்த வேண்டும் எனவும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

### பட்டினி தினத்தை முன்னிட்டு முதலமைச்சர் விஜய்யின் ஆணைக்கிணங்க

## கோவை ஆனைகட்டியில் பழங்குடிகள் வாழும் மலைவாழ் கிராமத்தில் அசைவ விருந்து அன்ன தானம் செய்த இளம் பெண் தொழிலதிபர்



கோவை ஆனைகட்டியில் பட்டினி தினத்தை முன்னிட்டு முதல்வர் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க பழங்குடிகள் வாழும் மலைவாழ் கிராம பகுதிகளில் அசைவ விருந்து அன்ன தானம் செய்து பசி பிணியை போக்கிய தமிழக வெற்றிக் கழகத்தை சார்ந்த இளம் பெண் தொழிலதிபர் உமா மகேஸ்வரி.

உலகபட்டினிதினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்குமாறு, தமிழக வெற்றிக் கழக தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான சி. ஜோசஃப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், கஸ்தூரிநாயக்கன் பாளையம் பகுதியை சார்ந்த இளம் தொழில் அதிபரும், தமிழக வெற்றிக் கழக தொண்டருமான உமா மகேஷ்வரி, கோவை ஆனைக்கட்டி மலை பகுதியில் வாழும் மலை வாழ் பழங்குடிகளுக்கு அசைவ விருந்து வழங்கினார். பழங்குடிகள் மட்டுமின்றி அப்பகுதி வழிபோக்கர்கள், வாகன ஓட்டிகள் உட்பட 1,500க்கும் மேற்பட்டோருக்கு சிக்கன் பிரியாணி அன்ன தானம் வழங்கினார்.

இதுகுறித்து தமிழக வெற்றிக் கழகத்தைச் சார்ந்த உமா மகேஷ்வரி பேசும்போது, தமிழ்நாட்டின் முதல்வரும் தமிழக வெற்றிக் கழக தலைவருமான விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க, அன்னதானம் வழங்குவதாக தெரிவித்தார். பசி எனும் கொடுமையை நாட்டில் முற்றிலுமாகஅகற்றவேண்டும் என்ற முதல்வர் விஜய் அவர்களின் உன்னதமான நோக்கத்திற்கு உறுதுணையாக இந்த அன்ன தானம் சேவையை செய்வதாக தெரிவித்தார்.

முதியோர், பெண்கள், சிறுவர்கள் என பலருக்கும் அசைவ விருந்து அன்னதானம் வழங்கியபோது மனநிறைவுதந்ததாக தெரிவித்த உமா மகேஸ்வரி, பழங்குடிகள் வாழும் பகுதியில் அன்னதானம் வழங்கியது முதல்வர் விஜய் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சி என தெரிவித்தார்.

இதுபோன்று சேவைகளை முன்பிருந்து செய்து வருவதாக தெரிவித்த அவர், இன்றைய தினம் மட்டுமின்றி இனி வரக்கூடிய நாட்களிலும் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும் என்றும், பசி இல்லாத மனித குலத்தை உருவாக்கும் தளபதி விஜய் அண்ணா அவர்களின் உன்னத நோக்கத்திற்கு என்றும் உறுதுணையாக செயல்படுவேன் என்றும் தெரிவித்தார்.

### தூத்துக்குடி பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு தியாகத்திருநாள் தொழுகை

## தூத்துக்குடி உள்ள ஜாமியா பள்ளிவாசலில் இமாம் அப்துல் அலிம் தலைமையில் நடைபெற்றது



இறைதூதர் இப்ராஹீமின் தியாகத்தை போற்றும் வகையில் கொண்டாடப்படுவது தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை ஆகும் ஹஜ் பெருநாள் என்றும் அழைக்கப்படுகிறது இந்த பக்ரீத் பண்டிகை இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு தூத்துக்குடியில் உள்ள பழமையான ஜாமியா பள்ளிவாசலில் தலைமை இமாம் அப்துல் ஆலிம் தலைமையில் ஹஜ் பெருநாள் தொழுகை நடைபெற்றது

இதில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு உலகில் அமைதி அன்பு சகோதரத்துவம் தியாகம் ஆகியவை தழைத்தோங்க வேண்டி சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர் பின்னர் ஒருவருக்கொருவர் பக்ரீத் பண்டிகை வாழ்த்துக்களைதெரிவித்துக் கொண்டனர்

இதைத்தொடர்ந்து இஸ்லாமியர்கள் தங்கள் வீடுகளுக்கு சென்று ஆடுகளை பலியிட்டு குருபானி வழங்கினர் இதில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு தர்மம் செய்கின்றனர்

இந்த சிறப்பு தொழுகையில் அரசு காஜி முஜிபுர் ரஹ்மான் ஜாமியா பள்ளிவாசல் தலைவர் மீராசா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## துறையூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 121 பயனாளிகளுக்கு ரூ.1.19 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் விஷுமகாஜன் வழங்கினார்



தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம்,துறையூர்கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் மாவட்ட ஆட்சியர் விஷுமகாஜன், தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது: பொதுமக்கள் மற்றும் அனைத்து துறைச் சார்ந்த அலுவலர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்! மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்ற பிறகு,இது என்னுடைய முதல் மக்கள் தொடர்பு முகாம் ஆகும்.

இன்றையதினம், துறையூர் கிராமத்தில் நடைபெறுகின்ற மக்கள் தொடர்பு முகாமில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை குறித்து கோவில்பட்டி சார் ஆட்சியர் எடுத்துரைத்தார்கள். மேலும், பல்வேறு வகையான நல்ல திட்டங்கள் மற்றும் அனைத்து துறைகளின் செயல்பாடுகள் பற்றியும் திட்ட விளக்க கண்காட்சி அரங்கம் போன்று அமைத்து விளக்கி கொண்டிருக்கிறார்கள்.

அரசு சார்பாக ஒவ்வொரு ஆண்டும் புது புது பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைவருக்கும் இந்த திட்டங்கள் பற்றியும், அதன் பயன்பாடுகள் மற்றும் தகுதி அடிப்படைகள் என அனைத்தையும் குறித்து துறை சார்ந்த அலுவலர்கள் விளக்கியிருப்பார்கள். என்னென்ன திட்டங்கள் யார் யாருக்கெல்லாம் தகுதியுடையது என்பதை நன்றாக அறிந்து கொண்டு, ஒவ்வொரு திட்டங்களையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு விஷயங்களுக்கும் அரசு ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. உதாரணமாக, வேளாண்மைத்துறை சார்பாக உரங்கள், விதைகளுக்கு மானியம், பல வகையான இயந்திரங்களைவாடகைஅடிப்படையில் எடுத்து பயன்படுத்துதல் என இதுபோன்று ஒவ்வொரு சிறு சிறு செயல்பாடுகளுக்கும் அரசு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. எனவே, அனைத்து திட்டங்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ஜூன் மாதம் பள்ளிகள் மறுபடியும் திறக்கப்படவிருக்கிறது. அதேப்போல் 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் அனைவரும் கல்லூரிகளில் சேர்வதற்கு விண்ணப்பம் அளித்திருப்பார்கள். உங்கள் வீட்டில் உள்ள குழந்தைகள் அனைவரும் கல்லூரி பட்டப்படிப்பு கண்டிப்பாக படிக்க வேண்டும் என்பதை நீங்கள் உறுதி செய்யுங்கள். மக்கள் தொடர்பு முகாம் மட்டுமல்லாது, ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் குறைதீர்வு நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதிலும் உங்களுடைய மனுக்களை அளிக்கலாம். நீங்கள் அளிக்கின்ற அனைத்து மனுக்களுக்கும் விரைவாக தீர்வு வழங்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறோம்.

அதனைத் தொடர்ந்து, மொத்தம் 121 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 19 இலட்சத்து 76 ஆயிரத்து 456 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் விஷுமகாஜன், பயனாளிகளுக்கு வழங்கினார். முன்னதாக, பொதுமக்கள், அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு துறைகளின் திட்ட விளக்க கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சியர் விஷுமகாஜன், பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கோவில்பட்டி சார் ஆட்சியர் ஹிமான்ஷு மங்கள், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) நாகராஜன், பொது மேலாளர் / இணை இயக்குநர், மாவட்ட தொழில் மையம் சொர்ணலதா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்)பா.ரமணன்,மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செந்தில்வேல்முருகன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலர் பென்னட் ஆசீர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மனோரஞ்சிதம், மாவட்ட சுகாதாரஅலுவலர்(கோவில்பட்டி) வித்யா, கோவில்பட்டி வட்டாட்சியர் அப்பனராஜ், கோவில்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்டீபன் ரத்தினகுமார் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## புதிய எம்.எல்.ஏ.க்களுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் போல கட்டாயப் பயிற்சி

### தமிழக அரசுக்கு கூடலூர் நுகர்வோர் மையம் கோரிக்கை

தமிழகத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு (MLA), ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதைப் போல கட்டாய நிர்வாக மற்றும் அரசியல் சட்டப் பயிற்சிகளை வழங்க "தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் நிர்வாக பயிற்சிஅகாடமி" என்ற அமைப்பை உருவாக்க வேண்டும் என கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் பொதுச்செயலாளர் சு. சிவசுப்பிரமணியம் தமிழக முதலமைச்சருக்குஅனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:



தமிழக அரசியலில் இளைஞர்களின் பங்களிப்பு அதிகரித்து வரும் நிலையில், மக்களிடம் மிகுந்த எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் நேரடியாகமக்களின்பிரச்சனைகளை கையாளும் பொறுப்பில் இருப்பதால், அவர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பது காலத்தின் கட்டாயமாகும். இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை, மாநில அரசின் அதிகாரங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்த தெளிவு. கேள்வி நேரம், மசோதா விவாதம் மற்றும் சட்டசபை விவாத ஒழுக்கம் குறித்த பயிற்சிகள். மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காவல் துறை மற்றும் வருவாய்த் துறைகளுடன் இணைந்து கள ஆய்வு மேற்கொள்தல். எம்.எல்.ஏ தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் அரசுத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்தல். ஊடகங்களை அணுகும் முறை, பொது மேடை பேச்சு, கோபக் கட்டுப்பாடு மற்றும் ஊழல் தடுப்புச் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு.போன்றவை அடிப்படை பயிற்சிகளாக வழங்க வேண்டும்.

பயிற்சி அளிக்க ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள், முன்னாள் நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு பயிற்சிகளை வழங்கலாம்.

இந்த பயிற்சியின் மூலம் சட்டமன்றத்தில் தரமான விவாதங்கள் நடைபெறும், நிர்வாகத்திறன் மேம்படும்,ஊழல் குறையும் மற்றும் ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாகும்.

எனவே, தமிழக அரசு இதனைப் பரிசீலித்து, "தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் நிர்வாக பயிற்சி அகாடமி" (Tamil Nadu Legislative Leadership Training Academy)** என்ற அமைப்பை உடனடியாக உருவாக்கி, புதிய எம்.எல்.ஏ-க்களுக்குப் பயிற்சி அளிக்க முன்வர வேண்டும் என கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய பொதுச்செயலாளர் சிவசுப்பிரமணியம் கூறியுள்ளார்.

## "கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை பிரதமர் மோடி 'ஹிட்' கொண்டு விரட்டியடிப்பார்" தமிழிசை பேச்சு

திருவண்ணாமலை: "கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை பிரதமர் மோடி 'ஹிட்' கொண்டு விரட்டியடிப்பார்," என பாஜக மூத்த தலைவர் தமிழிசை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "அதிமுகவில் எம்எல்ஏக்களாக இருந்தவர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்தது குறித்து அவர்களது தொகுதி மக்களுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். மக்களின் தீர்ப்பை மதிக்காமல் பதவியை ராஜினாமா செய்தது தவறு; தவெக அதை ஊக்குவிப்பது அதைவிட மிக மிக தவறு. கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை பிரதமர் மோடி 'ஹிட்' கொண்டு விரட்டியடிப்பார்.



இளைஞர்கள் மீது குறை சொல்வது தவறு.அவர்கள் ஆக்கப்பூர்வமாக இருக்கின்றனர். பிரதமர் மோடி நான்கு நாட்களுக்கு முன்னர், 51 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறார். கரோனாவையே எதிர்கொண்ட பிரதமர் மோடி, கரப்பான்பூச்சி கட்சியையும் எதிர்கொள்வார்" என்று அவர் கூறினார்.

# கென்யாவில் மாணவிகள் விடுதியில் பயங்கர தீ விபத்து: 17 பேர் பலி



கிழக்கு ஆப்ரிக்க நாடுகளில் ஒன்றான மத்திய கென்யாவில் பெண்கள் தங்கும் விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த விடுதியில் கில்கில் பகுதியில் உள்ள உதுமிஷி பெண்கள் மேல்நிலை பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த விடுதியில் பள்ளியில் பயிலும் மாணவிகள் தங்கி படித்து வருகிறன்றனர். இந்தநிலையில், பள்ளி மாணவிகள் தங்கும்விடுதியில்நேற்று இரவு ஏற்பட்ட பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. மாணவிகள் நள்ளிரவு நேரத்தில் அயர்ந்து தூங்கிகொண்டிருக்கும் போது தீ மளமளவென பரவியது. இந்த விபத்தில் 17 மாணவிகள் உயிரிழந்தனர். 79 பேர் காயமடைந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். மீட்கப்பட்டவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்ககூடும் என அஞ்சப்படுகிறது. இந்த தீ விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தீ விபத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

தீ விபத்து ஏற்பட்ட மேல்நிலைப் பள்ளி கென்யா காவல் துறையால் நிர்வகிக்கப்பட்டு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இங்கு படிக்கும் மாணவிகளில் பெரும்பாளானோர் போலீஸ் அதிகாரிகளின் மகள்கள் ஆவர். கென்யாவில் கடந்த காலத்தில் ஏற்பட்ட தீ விபத்து

* 2001ம் ஆண்டில், மச்சாகோஸ் கவுண்டியில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 67 மாணவர்கள் உயிரிழந்தனர்.
* 2017ம் ஆண்டில், தலைநகர் நைரோபியில் உள்ள ஒரு பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 மாணவர்கள் உயிரிழந்தனர்.
* 2018ம் ஆண்டில், அரசு மேல்நிலைப் பள்ளியில் தீ விபத்தில் சிக்கி 60க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.
* 2024ம் ஆண்டில், மத்திய கென்யாவில் உள்ள ஒருபள்ளியில் ஏற்பட்ட தீ விபத்தில் 21 மாணவர்கள் எரிந்து உயிரிழந்தனர்.



# திமுகவில் இணைந்தார் அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ வெங்கட்ராமன்

சென்னை: திமுகவில் இணைந்த அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ வெங்கட்ராமன், நிலையான குழப்பமற்ற தலைமையின் கீழ் பணியாற்ற என் மனம் ஆவலாக இருக்கிறது என்று கூறியுள்ளார். 2014ஆம் ஆண்டு ஆலந்தூர் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றபோது அதில் போட்டியிட்டு வெற்றி பெற்று எம்.எல்.ஏ ஆனவர் வெங்கட்ராமன். ஜெயலலிதா மறைவுக்குப் பின் அதிமுக இரண்டாக பிளவுபட்டபோது முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவாளராக செயல்பட்ட வெங்கட்ராமன், அவருடைய அதிமுக உரிமை மீட்புக் குழுவில் இணைந்து சென்னை புறநகர மாவட்ட செயலாளராக பணியாற்றினார். இதனைத் தொடர்ந்து கடந்த 2024ஆம் ஆண்டு தனது ஆதரவாளர்களுடன் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் மீண்டும் அதிமுகவில் இணைந்தார். இந்நிலையில் இன்று சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்திற்கு தனது ஆதரவாளர்களுடன் சென்ற வெங்கட்ராமன், திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இவருடன் முன்னாள் அதிமுக மாவட்ட பொருளாளர் தனசேகரன், ஆலந்தூர் கிழக்கு அதிமுக வர்த்தக அணி செயலாளர் இளங்கோ, சென்னை மாநகராட்சி முன்னாள் அதிமுக கவுன்சிலர் ராஜேந்திரன், அதிமுக மாவட்ட மாணவர் அணி துணை செயலாளர் ஜெய பிரதாப், ஆலந்தூர் கிழக்கு பகுதி எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் மொசைக் பாபு, ஆடிட்டர் குமரகுரு உள்ளிட்டோர் இன்று திமுகவில் இணைந்தனர்.

இந்த நிகழ்வில் திமுக சார்பில் திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ் பாரதி, துணைப் பொதுச் செயலாளர் பொன்முடி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திமுகவில் இணைந்த பிறகு செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் எம்.எல்.ஏ வெங்கட்ராமன் பேசியதாவது,

"கழக தலைவர் அண்ணன் (மு.க ஸ்டாலின்) திமுகவில் என்னை வரவேற்று ஆதரித்துக் கொண்டார். அவருடன் எப்போதும் இருப்பேன். நிலையான குழப்பமற்ற தலைமையின் கீழ் பணியாற்ற என் மனம் ஆவலாக இருக்கிறது. இன்று முதல் என் கழகப் பணியை சீரும் சிறப்புமாக செய்வேன். எனக்கு அளித்திருக்கிற இந்த வாய்ப்புகளுக்காக நன்றி கூறுகிறேன்" என தெரிவித்தார்.

அவரிடம் அதிமுகவில் இருந்து வெளியே வந்ததற்கான காரணம் என்ன? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர், "அனைவருக்கும் அது தெரியும். ஒரு நிலையான தலைமையின் கீழ் பணியாற்ற உள்ளேன். தமிழக மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே என் விருப்பம்" என தெரிவித்தார்.

# தொழிற்சங்கத்தை வலுப்படுத்தும் த.வெ.க. ஒரு மாதத்தில் 90 சதவீத அ.தி.மு.க. நிர்வாகிகள் வருவார்கள் ஆதவ் அர்ஜுனா பேச்சு




பனையூரில் அதிமுக தொழிற்சங்க நிர்வாகிகள், தவெக பொதுச்செயலர் ஆனந்த் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தனர். இதன்படி அண்ணா தொழிற்சங்க பேரவை நிர்வாகி கமலக்கண்ணன் தலைமையில் நிர்வாகிகள் 100 பேர் த.வெ.க.வில் தங்களை இணைத்துக்கொண்டனர். மேலும் அதிமுக அமைப்புசாரா ஓட்டுநர் அணி, அண்ணா தொழிற்சங்க டாஸ்மாக் பிரிவு நிர்வாகிகளும் இணைந்தனர். தவெகவுக்குஇதுவரைதொழிற்சங்கம் இல்லாத நிலையில், கமலக்கண்ணன் இணைவுக்கு பிறகு புதிய தொழிற்சங்கம் தொடங்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அ.தி.மு.க.தொழிற்சங்கசெயலாளர் த.வெ.க.வில் இணையும் நிகழ்ச்சியில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசியதாவது:-

இன்னும் ஒரு மாதத்தில் 90 சதவீத அ.தி.மு.க. நிர்வாகிகள் த.வெ.க.வுக்கு வருவார்கள். அ.தி.மு.க.வினருக்கு ஆபர் எதுவும் கொடுத்து அழைக்கவில்லை. த.வெ.க. மட்டும் தான் ஒரே நம்பிக்கை என அ.தி.மு.க.நிர்வாகிகள் கூறி வருகின்றனர்.


அ.தி.மு.க.வில் இருந்து வரும் தலைவர்களை நாங்கள் ஒரு குடும்பம் போல வரவேற்கிறோம். காரணம், எம்.ஜி.ஆர் வழியில் நடக்கக் கூடியது த.வெ.க.தான். செங்கோட்டையன் அண்ணனுக்கு தலைவர் கொடுக்கும் மதிப்பை பார்த்து அவர்கள் வருகிறார்கள். 90 சதவீத அ.தி.மு.க. தொண்டர்கள் த.வெ.க.வில் சேருவதற்கு முடிவெடுத்துவிட்டார்கள். பா.ஜ.க.வுடன் சேர்ந்து சந்தித்த தோல்விகளை கூட அ.தி.மு.க. தொண்டர்கள் என்ன செய்வது என தாங்கிக் கொண்டார்கள். தி.மு.க. - அ.தி.மு.க. சேர்ந்து செய்த சூழ்ச்சியால்தான் அ.தி.மு.க.வினர் நம்பிக்கை இழந்தனர். ஜெயலலிதா தற்போது இல்லையே என நினைத்தார்கள். அதனால்தான் த.வெ.க.வில் வந்து சேர்ந்தனர்

புதுச்சேரியில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களிடம் இ.பி.எஸ். முதல்-அமைச்சராக ஆதரவு என கையெழுத்து கேட்டிருக்கிறார்கள். 47 எம்.எல்.ஏ.க்களுடன் இ.பி.எஸ். எப்படி முதல்-அமைச்சர் ஆக முடியும்? பின்னர்தான் தெரிந்தது. உதயநிதியும், இ.பி.எஸ்.சும் சேர்ந்து உதயநிதி முதல்-அமைச்சராகவும், இ.பி.எஸ். துணை முதல்-அமைச்சராகவும் ஆக சூழ்ச்சி நடந்தது. அதை முதன் முதலில் எதிர்த்தது கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் வி.சி.க.தான்.

செங்கோட்டையன் த.வெ.க.வில் இணைந்தபோது சிறிய கட்சி என விமர்சித்தனர். தமிழகத்தில் கட்சி நிதி முறை ஒழிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவு வெளியான அன்றே தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணி பேச்சுவார்த்தை நடந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.

# இருதரப்பு உறவின் இயல்புநிலைக்கு எல்லையில் அமைதி முக்கியம்: இந்தியா சீனா ஒப்புதல்



புதுடெல்லி: எல்லைப் பகுதிகளில் அமைதியைப் பேணுவதே இரு நாடுகளுக்கு இடையிலான ஒட்டுமொத்த உறவுகளை இயல்புநிலைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று இந்தியாவும் சீனாவும் தெரிவித்துள்ளன.

கிழக்கு லடாக்கில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு தொடர்பாக இந்தியாவும், சீனாவும் ஆலோசனை மேற்கொள்ளும் நோக்கில், எல்லை விவகாரங்கள் குறித்த ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக்கான பணிக்குழுவின் 35-வது கூட்டம் பெய்ஜிங்கில் நேற்று (மே 27) நடைபெற்றது.

இந்திய குழுவுக்கு வெளியுறவுத் துறை இணைச் செயலாளர் (கிழக்காசியா) சுஜித் கோஷும், சீன குழுவுக்கு அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகத்தின் எல்லை மற்றும் கடல்சார் விவகாரத் துறையின் தலைமை இயக்குநர் ஹூ யான்சியும் தலைமை தாங்கினர்.

இக்கூட்டம் குறித்த அறிக்கையை இந்திய வெளியுறவு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ளது. அதில், 'இந்த கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்கள் ஆக்கப்பூர்வமானதாகவும், எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் அமைந்திருந்தன. இருதரப்பினரும் இந்தியா - சீனா எல்லைப் பகுதிகளில் நிலவும் சூழலை ஆய்வு செய்தனர். எல்லைப் பகுதிகளில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பேணுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர்கள் திருப்தி தெரிவித்தனர்.

இந்த முன்னேற்றம், இருதரப்பு உறவுகளை படிப்படியாக இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு வழி வகுத்துள்ளது. எல்லை தாண்டிச் செல்லும் நதிகள் குறித்த நிபுணர்களின் ஆலோசனைக் கூட்டம் விரைவில் நடைபெற வேண்டும் என்று இருதரப்பிலும் வலியுறுத்தப்பட்டது.

24-வது சிறப்பு பிரதிநிதிகள் பங்கேற்ற பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்டவை உள்பட, பல்வேறு செயல்முறைகளின் வாயிலாக, தூதரக மற்றும் ராணுவ மட்டங்களில் வழக்கமான பரிமாற்றங்களையும் தொடர்புகளையும் தொடர்ந்து பேணிக் காக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

சீனாவில் நடைபெற உள்ள அடுத்த சிறப்பு பிரதிநிதிகள் கூட்டத்துக்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காக இரு தரப்பினரும் இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டனர்.

இந்த வருகையின்போது இந்திய வெளியுறவுத்துறை இணைச் செயலாளர் சுஜித்கோஷ், சீன வெளியுறவு அமைச்சகத்தின் ஆசிய விவகாரத் துறை தலைமை இயக்குநர் லியு ஜின்சாங்கைச் சந்தித்துப் பேசினார். மேலும், சீன வெளியுறவுத் துறையின் உதவி அமைச்சர் ஹாங் லெய் அவர்களை மரியாதைநிமித்தமாகச் சந்தித்துப் பேசினார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் 1500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பக்ரீத் பண்டிகை பிரியாணி அரிசி வழங்கப்பட்டது



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி, வழிகாட்டுதல் படி அனைவருக்கும் பக்ரீத் பண்டிகை நல்வாழ்த்துக்களுடன் 1500 குடும்பங்களுக்கு மத நல்லிணக்க பிரியாணி அரிசி வழங்கும்நிகழ்வுஈரோடு இந்திரா நகரில் நடைபெற்றது. விசிக ஈரோடு மண்டல செயலாளர் ஏ.ஜாபர் அலி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் குமாராபாளையம் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் அ.கதிர்வேந்தன், மாவட்ட பொருளாளர் ஐ.ஆல்ட்ரின் ராஜேஷ், பெருந்துறை சட்டமன்ற மாவட்ட செயலாளர் வி.விஜயபாலன் மற்றும் மாவட்ட துணை செயலாளர் தம்பி முருகானந்தம், வழக்கறிஞர் செந்தில்குமார் மாவட்ட துணைச் செயலாளர் முன்னிலை வகித்தனர் செய்தி தொடர்பாளர் ஜெ.எம். பைஜுல் அகமது வரவேற்புரை நன்றி உரை ஏ.பி.எஸ்.ஜாபர் சாதிக் மற்றும்குமாரபாளையம் தொகுதி செய்தி தொடர்பாளர் முரளி மாவட்டத் துணைச் செயலாளர் தீபா மாவட்ட துணைச் செயலாளர் அண்ணாதுரை பழனியப்பன் அஜித்குமார் வீரையன் ரங்கராஜன் ராஜா ராஜசேகர் கோகுல் கட்சியின் மாநில மண்டல நகர ஒன்றிய கிளை பொறுப்பாளர்கள் ஆகியோர் பொதுமக்களுக்கு பிரியாணி அரிசியை வழங்கினர். 22 ஆண்டுகளாக வருடந்தோறும் ரம்ஜான் பண்டிகையன்று வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு பிரியாணி அரிசி வழங்கும் நிகழ்வு, இம்முறை சட்டமன்ற தேர்தல் நடைபெற்ற காரணத்தால் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி வழங்க முடியாமல் போனது. இதன் படி தற்போது பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு மத நல்லிணக்கசார்பில் பிரியாணி சமைப்பதற்கு தேவையான உயரக அரிசி, சேமியா பாக்கெட் மற்றும் சர்க்கரை போன்றவை சுமார் 1500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. இஸ்லாமியர்கள் மற்றும் அனைத்து சமூக மக்களும் இதில் அப்பகுதி மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பிரியாணி அரிசியை பெற்றுக் கொண்டதோடு இறைவனுக்கு நன்றி கூறினார்.

# கூடலூர் அருகே யானை தாக்கியதில் மாணவன் உயிரிழப்பு



நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே பந்தலூர் தாலுகா குந்தலாடியை அடுத்துள்ளது புத்தூர் வயல் கிராமம். வனப்பகுதியை ஒட்டிய கிராமம்என்பதால்இங்கு யானை, சிறுத்தை உள்ளிட்ட வனவிலங்குகள் நடமாட்டம் அவ்வப்போது காணப்படும். இந்த நிலையில் நேற்று புத்தூர்வயலைச் சேர்ந்த சிறுவன் யானை தாக்கி பலியான சம்பவம் கிராம மக்களைபெரும்சோகத்தில் ஆழ்த்தி உள்ளது. புத்தூர் வயல் கிராமத்தைச் சேர்ந்தவர் ஷாஜகான். இவரது மகன் மிஸ்ஹாப் (வயது 14).

இவர் அந்த பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 8-ம்வகுப்புபடித்து வந்தார். தற்போது தேர்ச்சி பெற்று 9-ம் வகுப்பு செல்ல உள்ளார். நேற்று மாலை புத்தூர்வயலில் இருந்து பாக்கனா என்ற இடத்துக்கு மிஸ்ஹாப் முடிவெட்டுவதற்காக சென்றார். அங்கு முடிவெட்டி விட்டு மாலை 6.45 மணி அளவில் வீட்டுக்கு நடந்து வந்து கொண்டு இருந்தார். அப்போது திடீரென சாலைக்கு வந்த ஒரு காட்டு யானை, சிறுவன் மிஸ்ஹாப்பை தாக்கியது. இதனால் மிஸ்ஹாப் சத்தம் போட்டு அலறினான். சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்குதிரண்டனர். கூட்டத்தை பார்த்து யானை மீண்டும் காட்டுக்குள் ஓடி மறைந்து கொண்டது.

யானை தாக்கியதில் மிஸ்ஹாப் பலத்த காயம் அடைந்தார். அவரை பொதுமக்கள் மீட்டு சுல்தான்பத்தேரியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். மிஸ்ஹாப்பை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

# அரசியலில் அடுத்தகட்ட நகர்வு என்ன? ஆதரவாளர்களிடம் சி.விஜயபாஸ்கர் ஆலோசனை



சென்னை:

"இன்றைய அரசியல் களம் என்ன, அடுத்தது என்ன என்பது குறித்து எனக்கு மகத்தான வெற்றியை கொடுத்த என் தொகுதி மக்களின் உணர்வுகள், கருத்துக்களை கேட்டறிந்தேன். அவர்களின் கருத்துக்கு ஏற்ப அடுத்தகட்ட நகர்வினை பற்றி முடிவெடுப்பேன்" என அதிமுக முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக 47 இடங்களில் மட்டுமே வென்று மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டது. அதைத்தொடர்ந்து பொதுச் செயலாளர் பழனிசாமியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு சி.வி.சண்முகம் தலைமையில் 25 எம்எல்ஏக்கள் தனி அணியாகச் செயல்பட்டனர்.

அதைத் தொடர்ந்து, இரு அணியினரும் சட்டப்பேரவை அதிமுக தலைவர், கொறடாவைத் தேர்ந்தெடுத்து, பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகரிடம் கடிதம் அளித்திருந்தனர். இதற்கிடையே, சி.வி.சண்முகம் அணியில் இருந்த மரகதம் குமரவேல், சத்யபாமா, ஜெயக்குமார், இசக்கி சுப்பையா ஆகிய 4எம்எல்ஏக்கள்,தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்தனர்.

இந்நிலையில், சி.வி.சண்முகம் அணி எம்எல்ஏக்களான எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர், கே.பி.அன்பழகன் உள்ளிட்டோர் பழனிசாமியை சென்னை பசுமைவழிச் சாலையில் நேற்று சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உடன்பாடு எட்டப்பட்ட நிலையில், இரு அணியினரும் தலைமைச் செயலகம் புறப்பட்டுச் சென்றனர். அங்கு இரு அணிகள் சார்பிலும், தகுதி நீக்க நடவடிக்கை கோரி பேரவைத் தலைவரிடம் ஏற்கெனவே அளித்த கடிதத்தை திரும்பப் பெறுவதாக கடிதம் அளித்தனர்.

மேலும், அதிமுகவின் சட்டப்பேரவை கட்சித் தலைவராக பழனிசாமி, கொறடாவாக அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை தேர்ந்தெடுத்திருப்பதாகவும் பேரவைத் தலைவரிடம் கடிதம் அளித்தனர். இந்நிகழ்வில், சி.வி.சண்முகம் உடன் வரவில்லை. அவர் அதிருப்தியில் இருப்பதாகத் தெரிகிறது. அதேபோல சி.விஜயபாஸ்கர், சபாநாயகரை சந்திக்க வந்தபோதும், பழனிசாமியை நேரில் சந்திக்கவில்லை. இதனால் அவரும் அதிருப்தியில் இருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்த நிலையில், புதுக்கோட்டை விராலிமலையில் உள்ள இல்லத்தில் தனது ஆதரவாளர்களுடன் விஜயபாஸ்கர் இன்று ஆலோசனை நடத்தினார்.இதில் அதிமுகவில் தொடரலாமா, தவெகவில் இணையலாமா, அரசியலில் இருந்தே விலகலாமா என்ற 3 விஷயங்களை முன்வைத்து அவர் தன் ஆதரவாளர்களிடம் கருத்துக்களை கேட்டதாகத் தகவல்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இந்தச் சூழலில் இன்றைய அரசியல் களம் என்ன, அடுத்தது என்ன என்பது குறித்து எனக்கு மகத்தான வெற்றியை கொடுத்த என் தொகுதி மக்களின் உணர்வுகள், கருத்துக்களை கேட்டறிந்தேன். அதுபோல என் வெற்றிக்காக உழைத்த கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகளிடம் கருத்துகளை கேட்டுவருகிறேன்.

அவர்களின் கருத்துக்கள், எண்ணங்களை, உணர்வுகளை உள்வாங்கிக் கொண்டிருக்கிறேன். அவர்களின் கருத்துக்கு ஏற்ப முடிவெடுப்பேன். என்னை வெற்றிபெற வைத்த தெய்வங்களின் கருத்தை கேட்டுவிட்டு அடுத்தகட்ட நகர்வினை பற்றிக் கூறுவேன்" என்றார்.



# குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தில் ரூ.1,150 கோடி மதிப்பிலான கோகைன் பறிமுதல்


அகமதாபாத்:

குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தில் கோகைன் போதைப் பொருள் கடத்தப்படுவதாக மாநில தீவிரவாத தடுப்புப் படையினருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து கடந்த செவ்வாய்க் கிழமை நள்ளிரவு துறைமுகத்துக்கு வந்த குஜராத் ஏடிஎஸ் படை அதிகாரிகள், கடலோரக் காவல் படை அதிகாரிகளுடன் சோதனை நடத்தினர். அப்போது கடல் பகுதியில் ஒரு கப்பல் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டு இருப்பதைக் கண்ட அதிகாரிகள் அந்தக் கப்பலில் சோதனை நடத்தினர். அப்போது அங்கு 6 பைகளில் 118 கிலோ எடையுடைய கோகைன் போதைப் பொருள் இருந்தது தெரிய வந்தது. இதன் சர்வதேச சந்தையில் இதன் மதிப்பு ரூ.1,150 கோடியாகும்.

இது குறித்து குஜராத் போலீஸ் டிஜிபி கே.எல்.என்.ராவ் கூறும்போது, "டெல்லியில் வசிக்கும் உகாண்டா,தான்சானியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 2 பேருக்கு இந்த பொருள் கப்பலில் வந்துள்ளது. இது தொடர்பாக இதுவரை 3 பேரை பிடித்து விசாரித்து வருகிறோம். இந்த கப்பல் பிரேசில், பல்வேறு லத்தீன் அமெரிக்க நாடுகள், மெக்ஸிகோ, அமெரிக்கா, கராச்சி துறைமுகம் வழியாக முந்த்ரா துறைமுகத்தை அடைந்துள்ளது" என்றார்.

# குழந்தைகள் உங்கள் ஆட்சியில் பாதுகாப்பு இல்லை கோடம்பாக்கம் சம்பவத்தை முன்வைத்து முதலமைச்சர் விஜய்க்கு எடப்பாடி பழனிசாமி கேள்வி



சென்னை:"முதல்வரே, எந்த குழந்தைகளை வைத்து நீங்கள் வாக்கு சேகரித்தீர்களோ, அதே குழந்தைகள் உங்கள் ஆட்சியில் பாதுகாப்பு இன்றி நிற்கின்றனர். இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில்,"சென்னை கோடம்பாக்கத்தில் காவலர் உள்ளிட்ட மூவர் சிறுவனுக்கு வாயில் மது ஊற்றி, கொடும் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கியதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. சிறுவன் தன்னை தற்காத்துக்கொள்ள டிவி ரிமோட்டால் காவலரைத் தாக்கிவிட்டு தப்பி ஓடி, அசோக் நகர் காவல் நிலையத்துக்கு நடந்தே வந்து புகார் அளித்துள்ளதாக செய்திகள் வருகின்றன.

தமிழகத்தில் நாள்தோறும் பரிணமிக்கும் குற்றச் செயல்களின் தன்மை, மிகுந்த அச்சமூட்டுகிறது. முதல்வரே, எந்த குழந்தைகளை வைத்து நீங்கள் வாக்கு சேகரித்தீர்களோ, அதே குழந்தைகள் உங்கள் ஆட்சியில் பாதுகாப்பு இன்றி நிற்கின்றனர். இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

"சட்டம் ஒழுங்கு ஆய்வுக்கூட்டம் என ஒன்றை நீங்கள் நடத்தியதாக ஒரு வீடியோவை உங்கள் அரசு வெளியிட்டது. அது மற்றுமொரு சம்பிரதாயத்துக்கான கூட்டமாக மாற்றி விடப்பட்டு உள்ளதோ என்ற சந்தேகங்கள் வலுப்பெறுகிறது. வேலியே பயிரை மேயும் கொடூரம் நடப்பது உங்கள் மனதை உறுத்தவில்லையா?

சிறுவனுக்கு நேர்ந்துள்ள இந்த கொடுந்துயருக்கு காரணமான கொடூரர்கள் யாராக இருப்பினும், அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இனியேனும் "கோட் - சூட்- போட்டோஷூட்" மாடல் ஆட்சியை கைவிட்டு, சட்டம் - ஒழுங்கைக் காக்க உணர்வோடு செயல்பட வேண்டும் என பொய்க்கால் குதிரை அரசை வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழக அரசின் ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் செல்லும்: உச்ச நீதிமன்றம் அதிரடி



புது டெல்லி: தமிழக அரசு கொண்டு வந்த ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் செல்லும் என உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஆன்லைன் சூதாட்டம் காரணமாக பணத்தை பறிகொடுத்து தமிழகத்தில் உயிரிழப்புக்கள் ஏற்பட்ட நிலையில், கடந்த 2023-ஆம் ஆண்டு அப்போதைய திமுக அரசு ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டத்தை இயற்றியது. இதை எதிர்த்து, இந்த வகை விளையாட்டு களை அளித்துவரும் பல்வேறு நிறுவனங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழங்குதொடர்ந்தன.

மாநில அரசுகளுக்கு ஆன்லைன் விளையாட்டுக்களை தடை செய்யும் அதிகாரம் இல்லை என தங்களின் வாதத்தை விளையாட்டு நிறுவனங்கள் முன்வைத்தன. தொடர்ந்து இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், தமிழக அரசு கொண்டு வந்த ஆனைலைன் சூதாட்ட தடைச் சட்டத்திற்கு தடைவிதித்து உத்தரவிட்டது.

அதேபோன்று கர்நாடகாஅரசு கொண்டுவந்த ஆன்லைன் சூதாட்டம் தடைச் சட்டத்தையும் அம்மாநில உயர் நீதிமன்றம் நிறுத்தி வைத்தது.

இந்நிலையில் தமிழகம் மற்றும் கர்நாடக அரசுகள் ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்திற்கு எதிராக உயர் நீதிமன்றங்கள் பிறப்பித்த தடையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தன. இந்த வழக்கை இன்று விசாரித்த உச்ச நீதிமன்றம் தமிழக, கர்நாடக அரசுகள் கொண்டுவந்த ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் செல்லும் என உத்தரவிட்டுள்ளது. மேலும், சென்னை, கர்நாடகா உயர் நீதிமன்றங்களின் தடை உத்தரவு தவறானது என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோன்று இணைய வழி விளையாட்டுகளுக்கு ஜிஎஸ்டி வரி விதிப்பை எதிர்த்து தனியார் விளையாட்டு நிறுவனங்கள் தொடர்ந்த வழக்கையும் உச்ச நீதிமன்றம் இன்று விசாரித்தது.

கடந்த 2023இல் வெளிநாட்டு ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் பதிவு செய்வது கட்டாயம் என்றும், இத்தகைய ஆன்லைன் விளையாட்டுக்களுக்கு 28% ஜிஎஸ்டி விதிக்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்தது.

இதைஎதிர்த்துவிளையாட்டு நிறுவனங்கள் சார்பாக இந்தியா முழுவதும் பல்வேறு உயர் நீதிமன்றங்களில்வழக்கு தொடரப்பட்டன. இந்த வழக்குகள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்திற்கு சென்ற நிலையில், நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வின் முன் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், "பந்தயம் மற்றும் சூதாட்டம் ஆகியவை வணிகச் செயல்பாடுகளுக்கு அப்பாற்பட்டவை எனக் கருதப்படுவதால், அத்தகைய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு எந்தவொரு அடிப்படை உரிமையையும் விளையாட்டு நிறுவனங்கள் கோர முடியாது. எனவே இணைய வழி விளையாட்டுகளுக்கு 28% ஜிஎஸ்டி வரி விதிப்பு செல்லும்" என்று அதிரடியாக தீர்ப்பளித்தனர்.

# நீட் வினாத்தாள் கசிவு வழக்கில் மருத்துவர், இயற்பியல் ஆசிரியர் என மேலும் 2 பேர் கைது




புதுடெல்லி:

நீட் யுஜி வினாத்தாள் கசிவு வழக்கில் மருத்துவர் மற்றும் இயற்பியல் ஆசிரியர் என மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீட் யுஜி வினாத்தாள் கசிந்ததாக எழுந்த புகாரை அடுத்து, 23 லட்சம் மாணவர்கள் எழுதிய அந்த தேர்வை தேசிய தேர்வு முகமை ரத்து செய்தது. இதற்கான மறுதேர்வு வரும் ஜூன் 21-ல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. லட்சக் கணக்கில் பணம் கைமாறிய இந்த வினாத்தாள் மோசடி குறித்து சிபிஐ தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், மகாராஷ்டிர மாநிலம் லத்தூரைச் சேர்ந்த மருத்துவர் மனோஜ் ஷிரூரே, புனேயில் உள்ள பயிற்சி மையத்தின் இயற்பியல் ஆசிரியர் தேஜஸ் ஹர்ஷத் குமார் ஷா ஆகிய 2 பேரை கைது செய்துள்ளதாக சிபிஐ அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.


வினாத் தாள் தயாரிப்பாளரிடமிருந்து வேதியியல் கேள்விகளைப் பெற்று மாணவர்களுக்குக் கொடுத்ததாக ஷிரூரே மீதும், மற்றொரு குற்றவாளியிடமிருந்து கசிந்த இயற்பியல் கேள்விகளைப் பெற்றதாக ஷா மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவர்களையும் சேர்த்து இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. இந்த மோசடி வலையமைப்பை முழுமையாகக் கண்டறிய சிபிஐ இதுவரை 49 இடங்களில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# புதுச்சேரியிலும் ஜூன் 4ந்தேதி பள்ளிகள் திறப்பு முதல்மந்திரி ரங்கசாமி அறிவிப்பு




புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளுக்கு கடந்த ஏப்ரல் மாதம் 27-ந்தேதி முதல் கோடை விடுமுறை விடப்பட்டிருந்தது. விடுமுறை நாட்களில் மாணவர்களுக்கு பள்ளிகளில் சிறப்பு வகுப்புகளோ அல்லது வேறு எந்த வகுப்புகளோ நடத்தப்படக்கூடாது என உத்தரவிடப்பட்டிருந்தது. முன்னதாக மே 31-ந்தேதி வரை கோடை விடுமுறை விடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.இதனால் ஜூன் 1-ந்தேதி பள்ளிகள் திறக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகாமல் இருந்து வந்தது. இந்த நிலையில், புதுச்சேரியில் வரும் ஜூன் 4-ந்தேதி முதல் பள்ளிகள் திறக்கப்படும் என புதுச்சேரி முதல்மந்திரி ரங்கசாமி அறிவித்துள்ளார். தமிழ்நாட்டிலும் ஜூன் 4-ந்தேதி முதல் பள்ளிகள் திறக்கப்படும் என ஏற்கனவே அறிவிப்பு வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# Chandrayaan2 finds possible subsurface ice on Moon. What we know



Since these regions are continuously shielded from both sunlight and thermal radiation, temperatures there remain extremely low, around 25 Kelvin.

Scientists studying data from India's Chandrayaan-2 mission have found fresh evidence pointing to the possible presence of ice beneath the Moon's surface near its South Polar Region. The findings come from a detailed analysis carried out by researchers at the Physical Research Laboratory (PRL), Ahmedabad, using observations from the Chandrayaan-2 orbiter's Dual Frequency Synthetic Aperture Radar (DFSAR).

The research focused on permanently shadowed regions (PSRs) near the lunar south pole – areas that never receive sunlight and remain among the coldest places in the solar system. Within these regions, scientists closely examined what they describe as "doubly shadowed craters," small craters located inside larger permanently shadowed craters, according to the press release by ISRO.

Temperatures extremely low

Since these regions are continuously shielded from both sunlight and thermal radiation, temperatures there remain extremely low, around 25 Kelvin. Such conditions make them ideal locations for preserving water-ice for very long periods.

The Chandrayaan-2 orbiter's DFSAR instrument played a central role in the study. Operating in L- and S-band microwave frequencies, it is the first fully-polarimetric Synthetic Aperture Radar designed to study the Moon. The instrument allowed scientists to probe beneath the lunar surface and examine how radar signals behaved when reflected from the ground below.

Using advanced radar polarimetric analysis, researchers identified radar patterns that are consistent with the possible existence of subsurface ice beneath the floors of four doubly shadowed craters in the lunar South Polar Region.

The study also introduces a more refined radar-based method for identifying potential subsurface ice deposits. According to the researchers, Circular Polarization Ratio (CPR) values greater than 1 along with Degree of Polarization (DOP) values lower than 0.13 may indicate volumetric scattering linked to subsurface ice deposits.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.